

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜூன் 09, 2022 | புரட்சி 21 | முழக்கம் 21 | விலை: ரூ.3.00


# பெரியாரின் பெண்ணிய விடுதலைக் கருத்துகளே குடும்ப வன்முறைக்குத் தீர்வாகும்


முனைவர் எஸ். ஆனந்தி


பெண் கல்வி, பெண்கள் வளர்ச்சி மற்றும் அதிகாரப்படுத்துதலுக்கான திட்டங்களில் தமிழ்நாடு முன்னிலையில் இருந்தாலும் குடும்ப வன்முறையில் பெண்கள் மோசமாகப் பாதிக்கப்படுவதில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருப்பதாக புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன. இதற்கான காரணங்களை ஆராய்ந்து சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர் முனைவர் ஆனந்தி, 'இந்து' ஆங்கில நாளேட்டில் (ஜூன் 4) கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். கட்டுரையின் சுருக்கமான கருத்தை தமிழில் தருகிறோம். குடும்ப வன்முறைக்கு பட்டியலிட்டுள்ள காரணங்கள்:

**1. கட்டாயத் திருமணம் :** கட்டாயத் திருமணத்துக்கு பெண்கள் உள்ளாக்கப்படுவது ஒரு காரணம். நவீன குடும்ப வாழ்க்கைக்கான செலவுகளை சரி கட்ட பெண்கள் உழைப்பு ஊதியமில்லாமல் கட்டாயத் திருமண முறையில் சுரண்டப்படுகிறது. 20 முதல் 22 சதவீத பெண்களே திருமணத்துக்குப் பிறகு ஊதியம் பெறும் வேலைக்குப் போகிறார்கள். 60 சதவீத படித்த பெண்கள் குடும்பத்தைக் கவனிக்க வேலைக்குப் போகாமல் ஆணாதிக்கமும் ஜாதிக் கட்டமைப்பும் கொண்ட குடும்ப அமைப்புக்குள் ஆண்களின் ஆதிக்கத்துக்குள் உழலுகிறார்கள். மனைவியை கணவன் அடிப்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்ற மனநிலையில் 79.8 சதவீதம் பெண்கள் இருப்பதோடு 81.1 சதவீத பெண்கள் உதவுவோர் இல்லாமல் குடும்ப வன்முறையை சந்திக்கிறார்கள்.

பட்டியல் இனப் பெண்கள் உயர்கல்வியில் அதேப் பிரிவு ஆண்களைவிட கூடுதலாக இருந்தாலும் (பெண்கள் 40.4 - ஆண்கள் 38.8) தொழிலாளர்களாக உழைக்கும் பெண்களே அதிகம்.

குடும்பத்தின் மதிப்பை சமூகத்தில் கூடுதலாக்கவும் நல்ல மாப்பிள்ளை கிடைப்பதற்கும் பெண்களின் உயர்கல்வி பெரிதும் உதவுகிறது. பொறியியல் பட்டம் பெற்ற பெண்கள் திருமணத்துக்கு முன்பு வேலைக்குப் போவதை மேல்நோக்கி முன்னேறி வரும் நடுத்தர குடும்பங்கள் அனுமதித்தாலும் திருமணத்துக்குப் பிறகு இவர்களின் எதிர்காலத்தை குடும்பமே நிர்ணயிக்கிறது.

**2. ஜாதி மறுப்புத் திருமணங்கள் :** ஜாதி மறுப்புத் திருமணம் செய்த பெண்கள், ஆண் இளைஞர்களாலும் ஜாதிக் குழுக்களாலும் வன்முறைகளைச் சந்திப்பதோடு இத்தகைய வன்முறைக்கு ஆண் இளைஞர்கள் பள்ளி மற்றும் கல்லூரி காலத்திலிருந்தே பயிற்றுவிக்கப்படுகிறார்கள். உதாரணமாக தமிழ்நாட்டில் ஒரு பள்ளி நிர்வாகம் மாணவர் சேர்க்கையின்போது வேறு சாதியைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்ய மாட்டேன் என்று உறுதி தர வேண்டும் என்று வற்புறுத்துகிறது. (செய்தி: 'தி இந்து', ஜூலை 12, 2013) ஜாதிக் கலப்பு வழியாக பெண்கள் வயிற்றில் பிற ஜாதி கரு வளரக் கூடாது என்பதே குடும்ப கவுரமாகக் கருதப்பட்டு, அதைக் காப்பாற்ற வன்முறை ஒரு ஆயுதமாக்கப்படுகிறது. கல்வியில் உயர்நிலையிலிருக்கும் பெண்கள், சமூகத்தில் பெண்களின் சுதந்திரத்தை சகித்துக் கொள்ள முடியாத ஆண் களால் குடும்பத்திலும் சமூகத்திலும் வன்முறையை எதிர்கொள்கிறார்கள். உயர் கல்விக்கும் பெண்கள் சுதந்திரத்துக்குமான உறவு துண்டிக்கப்படுகிறது.

**3. கட்டாய உடலுறவு :** திருமணமான பெண்கள், கணவர்களின் கட்டாய உடலுறவுக்கு சம்மதித்தாக வேண்டும் என்பதும் பெண்கள் மீதான வன்முறைக்கு ஒரு காரணம். (அண்மையில் டெல்லி உயர்நீதிமன்றம், கணவர்களின் கட்டாய உடலுறவு, பாலியல் குற்றம் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. - ஆர்)

ஜெ.எஸ். வர்மா ஆணையம், கணவர்கள் மனைவியர்களிடம் திணிக்கும் கட்டாய உடலுறவை கிரிமினல் குற்றமாக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. ஒன்றிய ஆட்சி இதை ஏற்கவில்லை. டெல்லி உயர்நீதி மன்றத்தில் இது தொடர்பான வழக்கில் 2017இல் ஒன்றிய ஆட்சி தாக்கல் செய்த மனுவில் இது குறித்து ஒருமித்த கருத்தை சமூகத்தில் உருவாக்க வேண்டுமே தவிர, அரசு தலையிட்டு சட்டமாக்க முடியாது என்று தெரிவித்திருந்தது.

குடும்ப நலத் திட்ட உதவிகள் , பேறுகால விடுப்பு நாள் அதிகரிப்பு போன்ற அரசின் திட்டங்கள், உண்மையில் பெண் உரிமைக்கான சொல்லாடல்கள் அல்ல. அவை அரசுக்கான சமூகநலத் திட்டங்கள். பெண்களுக்கான விடுதலையை - சுதந்திரத்தைப் பற்றிய கருத்துகளை உருவாக்குவதில்லை. மாறாக, இத்திட்டங்கள் அந்தக் கோட்பாடுகளைப் பின்னோக்கித் தள்ளிவிடுகின்றன. ஒரு பெண், தாய்மை அடைவதற்காக தன்னுடைய சுதந்திரத்தையும் சுயமரியாதையையும் உயர் பதவியில் இருந்தாலும் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இறைவி என்ற திரைப்படத்தில் கடைசி காட்சியில் கதாநாயகன், "நான் ஆண்; அந்த ஆணவமே என்னை, இந்தக் கொலையை செய்யத் தூண்டியது. பொறுத்துப் போவதற்கு நான் என்ன பொம்பிளையா; ஆண்..... நெடில்" என்ற வசனத்தைப் பேசுவார். இந்த மனோ பாவமே பெண்கள் உயர்கல்வி பெற்றிருந்தாலும், வன்முறைக்கு உள்ளாவதற்கான காரணியாகி விட்டது என்று எழுதியுள்ளார் கட்டுரையாளர்.

பெண் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும் என்ற பெரியார் சிந்தனையை மய்யமாக வெளிப்படுத்துகிறது இந்த ஆய்வு.

கட்டுரையின் இறுதிப் பகுதியை இவ்வாறு முடித்துள்ளார்.

தமிழ்நாட்டில், பெரியார் பேசிய சுயமரியாதைக் கருத்துகளின்அடிப்படையில் திருமண முறையில் குடும்ப அமைப்பில், வாழ்க்கை முறையில் அவசரமான சீர்திருத்தங்கள் தமிழ்நாட்டில் உடனடி தேவையாகியிருக்கின்றன.

Tamil Nadu, certainly and urgently, needs a radical reform of marriage, familialism and domesticity along the lines of periyar's advocacy of self respect and women's freedom.

பெண்களுக்கு, தாங்கள் ஆண்களைப்போல முழு விடுதலைக்கு உரியவர்கள் என்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கை அமைப்பின் தன்மையையே தங்களை ஆண்மக்களுக்கு அடிமையாய் கடவுள் படைத்திருப்பதன் அறிகுறியாய்க் கருதிக் கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம். ஆனால், ஒரு ஆண் இல்லாமல் பெண் வாழ முடியாது என்று ஒவ்வொரு பெண்ணும் கருதிக் கொண்டிருக்கிறாள். அப்படி அவள் கருதுவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமானால், பெண்களுக்கு பிள்ளைகள் பெரும் தொல்லை ஒன்று இருப்பதால், தாங்கள் ஆண்கள் இல்லாமல் வாழ முடியாது என்பதை ருஜூப்படுத்திக் கொள்ள முடியாதவர்களாய் இருக்கின்றார்கள். ஆண்களுக்கு அந்தத் தொந்தரவு இல்லாததால் தாங்கள் பெண்கள் இல்லாமல் வாழ முடியும் என்று சொல்ல இடமுள்ளவர்களாய் இருக்கின்றார்கள்.

அன்றியும், பிள்ளை பெரும் தொல்லையினால் தங்களுக்கும் பிறர் உதவி வேண்டி யிருப்பதால், அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாகி விடுகின்றது. எனவே, உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போக வேண்டும்.

– பெரியார்

'பெண் ஏன் அடிமையானாள்?' நூலிலிருந்து

## கியான்வாபி பள்ளிவாசல் பிரச்சனை என்ன ?

காசி நகரில் இருந்த சிவன் கோயிலை இடித்துவிட்டுத்தான் முகலாய மன்னர் அவுரங்கசீப் கியான்வாபி பள்ளிவாசலை கட்டினார். எனவே அந்த பள்ளிவாசலை இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது இந்துத்துவ அமைப்புகளின் வாதம். வாரணாசி என்ற காசியில் கியான்வாபி பள்ளிவாசலும் காசி விஸ்வநாதர் கோவிலும் அருகருகே அமைந்துள்ளன. இரண்டிற்குமான இடைவெளி வெறும் பத்து மீட்டர் மட்டுமே. பெரும்பாலும் ஒரே வாசல் வழியாகவே இரண்டு வழிபாட்டுத் தலங்களுக்கும் மக்கள் சென்று வருகின்றனர். மத ஒற்றுமையின் அடையாளமாகக் கொண்டாடப்பட வேண்டிய ஒரு இடத்தை மத மோதலுக்கான காரணியாக இந்துத்துவ சக்திகள் மாற்றுகின்றனர்.

1936இல் அப்பகுதி இந்துக்களுடன் ஏற்பட்ட பிரச்சனையைத் தொடர்ந்து பள்ளிவாசல் இடத்தில் தங்களுக்கான உரிமையைக் கோரி பனாரஸ் நீதிமன்றத்தில் முஸ்லிம்கள் வழக்கு தாக்கல் செய்தனர். முஸ்லிம்களின் வழிபாட்டு உரிமையை நீதிமன்றம் 1937 இல் உறுதிப்படுத்தியது.

1991 இல் இந்த பள்ளிவாசல் இடத்தை தங்களுக்கு வழங்க வேண்டும் என்று சோம்நாத் வியாஸ் என்பவர் வழக்கு தொடுத்தார். 1937 தீர்ப்பிற்கும் 1991 வழிபாட்டு தலங்கள் சட்டத்திற்கும் எதிராக இந்த வழக்கு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி முஸ்லிம்கள் அலகாபாத் உயர்நீதிமன்றத்தை நாடினர். இருபது வருடங்களுக்குப் பிறகு சிவில் நீதிமன்ற விசாரணைக்கு உயர்நீதிமன்றம் தடை விதித்தது.

உயர்நீதிமன்றத்தின் தடை இருக்கும் நிலையில் ஏப்ரல் 2021இல் சிவில் நீதிமன்றம் ஒரு உத்தரவை பிறப்பித்தது. இந்திய அகழ்வாராய்ச்சி நிறுவனம் பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதியில் அகழ்வாராய்ச்சியை நடத்த வேண்டும்


(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## ஆதீனம் – ஆளுநர் – அண்ணாமலை

தமிழ்நாட்டில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக மாநில உரிமைகளுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அழுத்தமாகக் குரல் கொடுத்து வருவது, பா.ஜ.க. மற்றும் சங்பரிவாரத்திற்கு கடும் அதிர்ச்சியையும் எரிச்சலையும் உருவாக்கி வருவதை உணர முடிகிறது. அண்மையில் பிரதமர் மோடி பங்கேற்ற ஒரு நிகழ்வில் தமிழக முதல்வர் தமிழ்நாட்டின் உரிமைகளை ஒன்றிய ஆட்சி முடக்கி வைத்துள்ளதை பட்டியலிட்டுப் பேசியது பெரும் அதிர்வலைகளை உருவாக்கியிருக்கிறது என்றே சொல்லலாம்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கும் நிலையில் தமிழ்நாட்டின் உரிமைக் குரல் பிற மாநிலங்களுக்கும் பரவிடக் கூடும் என்ற அச்சத்தில் தமிழ்நாட்டின் தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி, பா.ஜ.க. – பார்ப்பனிய சனாதன ஆதரவுத் தளமாக மாற்றுவதற்கான காய்கள் நகர்த்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் மதுரையில் ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தைச் சார்ந்த விசுவ இந்து பரிஷத், மதுரை ஆதீனம், ஜீயர்கள், சாமியார்களைக் கூட்டி ஒரு மாநாட்டை நடத்தியுள்ளது. தமிழக அரசை மிரட்டியுள்ளதோடு, திராவிடர் இயக்கக் கோட்பாடுகளையும் கண்டித்து ‘துறவிகள்’ பேசியிருக்கிறார்கள். ‘பாரத நாடு’ என்றுதான் பாரதி பாடியிருக்கிறாரரே தவிர, ‘பாகிஸ்தான்’ என்று கூறவில்லை என்றும், கோயில் சொத்துகளை தி.மு.க.வினர் கொள்ளை அடிக்கிறார்கள் என்றும், கோயில்களை அறநிலையத் துறையிடமிருந்து விடுவிக்க வேண்டும் என்றும் சொற்சிலம்பம் ஆடியதோடு மோடியையும் புகழ்ந்து தள்ளியிருக்கிறார்கள். ‘பாரத் மாதாக்கிஜே’, ‘ஜெய் ஸ்ரீராம்’ என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

சைவத்தையும் தமிழையும் பரப்புவதற்காக உருவாக்கப்பட்ட இந்த சைவ மடங்கள், இப்போது ஆர்.எஸ்.எஸ். பாசறைகளாக மாற்றப்பட்டுள்ளன. சைவ அறிஞர்களான மறைமலை அடிகளார், காசு. பிள்ளை போன்றவர்கள் ‘இந்து’ மதத்தை ஏற்காதவர்கள். “தமிழ் மரபில் உருவான சைவம், வர்ணாஸ்ரமத்தை எதிர்த்தது. தமிழை முதன்மையாக்கி ஜாதி மறுப்பை வலியுறுத்திய சைவம் பிறகு ஜாதிய கட்டமைப்புக்குள் சிக்கிக் கொண்டது” என்கிறார் சைவம் குறித்த ஆய்வாளர் நல்லூர் சரவணன். குன்றக்குடி அடிகளார் இந்த ஜாதி மறுப்பு மரபையே பின்பற்றினார். இந்து அறநிலையத் துறை என்று பெயர் சூட்டப்பட்டபோது அதை சைவ அறிஞரும் சட்ட வல்லுநருமான காசு (பிள்ளை) எதிர்த்தார். திராவிட அறநிலையத் துறை என்று பெயர் சூட்ட வற்புறுத்தினார். அந்த சைவ மட ஆதீனம், வர்ணக் கட்டமைப்பை நியாயப்படுத்தும் ‘இந்து’த்துவாவுக்கு ஆதரவாகப் பேசக் கிளம்பியிருக்கிறது.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, பார்ப்பனர் உள்ளிட்ட தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து கோயில் சொத்துகளை மீட்டுள்ளதோடு துறை அமைச்சர் சேகர் பாபு ‘இந்து’ மத பக்தர்கள் மனம் குளிரும் செயல்பாடுகளை முடுக்கி விட்டிருக்கிறார். ஆளும் கட்சி மீது இந்து எதிர்ப்பு அடையாளத்தைப் பயன்படுத்த முடியாமல், கவசமாகக் காத்து வருகிறார் என்றே கூறலாம். நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்த ‘பல்லக்கு சவாரி’யை மீண்டும் தொடங்கியது தருமபுரம் ஆதீனமடம். தமிழக ஆளுநரும் தெலுங்கானா ஆளுநரும் மடத்துக்குப் போய் ஆதீனத்தை சந்தித்தார்கள். பா.ஜ.க. தலைவர்கள் தங்கள் பாசறைகளாக இந்த மடங்களை மாற்றிக் கொண்டு பல்லக்கு சவாரியை நியாயப்படுத்தினார்கள். தங்களுக்கு கொலை மிரட்டல் இருப்பதாக பிரதமர் மோடியை சந்தித்து மனு தந்திருக்கிறார், மதுரை ஆதீனம். கோயில் சொத்து கொள்ளைப் போகிறது என்று கூக்குரலிடுகிறவர்கள் – அயோத்யா மண்டபத்தை தனியாரிடமிருந்து அரசு மீட்டால், பா.ஜ.க. போராட்டம் நடத்துகிறது. நாம் அனைத்து மடங்களையும் குற்றம்சாட்ட வில்லை; விலகி நிற்கும் மடங்களும் இருக்கின்றன.

ஆதீனங்கள் இப்படி ஒரு பக்கம் அரசியல் நடத்த, ஆளுநராக இருக்கும் ஆர்.என். ரவி, ஒன்றிய ஆட்சியின் தேசிய கல்விக் கொள்கைகளை தமிழ்நாட்டில் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளில் பெருமைப்படுத்திப் பேசி வருகிறார். அந்தக் கல்வித் திட்டத்தை தமிழ்நாட்டில் படிக்காமலே குறை கூறுவதாக தமிழக அரசையும் கல்வியாளர்களையும் இயக்கங்களையும் சிறுமைபடுத்துகிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி ஒப்புதலுக்கு அனுப்பி வைத்துள்ள 20க்கும் மேற்பட்ட மசோதாக்களை கிடப்பில் போட்டுள்ளார். உச்சநீதிமன்றம் ஆளுநருக்கு இந்த உரிமையில்லை என்று பேரறிவாளன் வழக்கில் திட்டவட்டமாக தெரிவித்து, ஆளுநரை மறைமுகமாகக் கண்டித்தும் தனது ‘சட்ட மீறலையும்’ அதிகார ஆணவத்தையும் மாற்றிக் கொள்ள தயாராக இல்லை.

இன்னொரு பக்கம் அண்ணாமலை என்ற முன்னாள் போலீஸ் அதிகாரி, தமிழக பா.ஜ.க. தலைவராக அதிரடி அரசியல் நடத்துவதாகக் கருதி, தரம் தாழ்ந்த பேச்சுகளை உதிர்த்து வருகிறார். அரசுக்கு கெடுவிதித்து சவால் விடுகிறார். ஊடக விளம்பரத்தில் ஒவ்வொரு நாளும் இடம் பெறுவதே பா.ஜ.க. வளர்ச்சி என்ற கற்பனையில் மூழ்கியுள்ள அவரது செயல்பாடுகள் எதிர் விளைவுகளை உருவாக்கி விட்டன. அவர்கள் ‘மலை போல’ நம்பியுள்ள அ.இ.அ.தி.மு.க.விலிருந்தே பா.ஜ.க. எதிர்ப்புக் குரல் வெடிக்கத் தொடங்கிவிட்டது. பா.ஜ.க. கூட்டணியில் இருந்த பா.ம.க.வும், பா.ஜ.க.விடம் எச்சரிக்கையாக விலகி நிற்க வேண்டும் என்று அதன் நிறுவனர் மருத்துவர் இராமதாசு, கட்சித் தொண்டர்களை வெளிப்படையாகவே எச்சரிக்கிறார். மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்காக அண்ணாமலை நடத்தும் நாடகங்கள் அக்கட்சியை கூட்டணி யிலிருந்தே தனிமைப்படுத்தி வருகிறது. இதுவே அண்ணாமலையின் தலைமை சாதனை.

தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கு மாற்று பா.ஜ.க. தான் என்ற ‘பிம்பம்’ பார்ப்பனர்களால் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டு வருகிறது. தி.மு.க. ஆட்சி என்றாலே, பார்ப்பனர்களுக்கு குமட்டுகிறது. எந்த ஆயுதத்தை எடுத்தாவது வீழ்த்தியாக வேண்டும் என்று ‘அனலில் இட்ட புழுவாக’ துடிக்கிறார்கள். சட்டமன்றம், உள்ளாட்சி என்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கொடி கட்டிப் பறந்தவர்கள் பார்ப்பனர்கள். 1937 இல் 7 மாகாண சட்டசபை முதல்வர்களில் 6 பேர் பார்ப்பனர்கள். இராஜகோபாலாச்சாரியார் முதல்வராக இருந்த காலத்தில் பார்ப்பன ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. இன்று இந்தியாவிலேயே ஒரு பார்ப்பனர்கூட சட்டசபை உறுப்பினராகவோ, அமைச்சராகவோ இல்லாத ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். இதனால்தான் ‘பெரியார் மண்’.

இந்த வரலாற்றுச் சூழலில், ஆதீனங்கள், ஆளுநர், அண்ணாமலை என்ற முக்கூட்டு அணி மதவாதம் அரசியல் அதிகாரம், ஆட்சி எதிர்ப்பு என்ற தளத்தில் தீவிரமாக களமிறங்கியிருக்கிறது.

திராவிட – பெரியாரியப் பார்வையில் தமிழ்நாடு கடந்து வந்த சமுக, வரலாற்றுப் பாதையையும் அதன் இலக்கினையும் இளைஞர்களிடம் கொண்டு சென்று அதற்கான பரப்புரை இயக்கங்களை முடுக்கி, இந்த பார்ப்பன சதியை வீழ்த்தியாக வேண்டும்.

**குறிப்பாக, இளம் பெண்களைத் திரட்டி அவர்களை பரப்புரையாளர் களாக உருவாக்கி, சமூக மாற்றத்தின் முன் வரிசைப் படையாக பெண்களை உருவாக்குவது மிகச் சிறந்த மாற்றத்தை உருவாக்கும் என்பது நமது உறுதியான நம்பிக்கை.**

– புரட்சிப் பெரியார் முழக்கம் 09.06.2022

## இஸ்லாமிய வெறுப்பு அரசியல்: உலகின் முன் தலைகுனிந்து நிற்கிறது - ஒன்றிய ஆட்சி

ஒன்றிய பாஜக ஆட்சி உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய நாடுகளின் கடும் எதிர்ப்பை இப்போது சந்தித்துக் கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக இந்திய ஒன்றியத்தில் நடைபெறுகிற இஸ்லாமிய எதிர்ப்பு பேச்சுக்கள், வெறுப்புக் கருத்துகள் தற்போது உலகம் முழுவதும் கடும் கண்டனத்தை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. வர இருக்கின்ற இஸ்லாமியர்களை எதிரி களாக கட்டமைத்து இந்துக்கள் வாக்குகளை திரட்டி விடலாம் என்று பாஜக காய் நகர்த்தி வருகிறது. அதற்கான திட்டங்களும் அரங்கேற்றப்பட்டு கொண் டிருக்கின்றன. காசி, மதுராவில் உள்ள மசூதிகள், இந்துக்கள் கோவில்களை இடித்து கட்டப்பட்டுள்ளன என்று புதிதாக உருவெடுத்துள்ளன.

ஸ்ரீரங்கப் பட்டினத்திற்குள் நுழையப் போவதாக விஷ்வ இந்து பரிஷத் காரர்கள் அறிவித்து போராட்டமும் நடத்தி முடித்திருக்கின்றனர். ஒவ்வொரு மாநிலங்களிலும் இஸ்லாமிய வெறுப்புப் பேச்சுக்கள் தீவிரமாக முடிக்கிவிடப் பட்டிருக்கின்றன. பாபர் மசூதி இடித்துவிட்டு அயோத்தியில் இராமர் கோவிலை கட்டலாம் என்று திட்டமிட்டவர்கள், மசூதி இடித்தவர்களையும் காப்பாற்றிவிட்டு, மசூதி இடித்தது நியாயம், அங்கே கோவில் இருந்தது என்பதற்கான தீர்ப்பையும் பெற்று, மாநில முதல்வர் அங்கு இராமனுக்கு கோவில் கட்டுகிற முயற்சியில் ஈடுபடுகிற நிலையில் இருந்து, மதவெறி தங்களுக்கு கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், அவர்கள் அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்தினார்கள். ஆனால், இப்போது அவர்கள் வசமாக சிக்கிக் கொண்டுவிட்டார்கள்.

அண்மையில், பாஜக வின் அதிகாரப்பூர்வ பேச்சாளராக இருக்கக் கூடிய நுபுர் ஷர்மா என்ற பார்ப்பனப் பெண், “டைம்ஸ் நவ்” தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், இஸ்லாமிய இறை தூதர்களைப் பற்றி பேசிய கருத்துகள், கடும் கொந்தளிப்பை உருவாக்கி விட்டன. அதே போல கட்சியின் டெல்லி தகவல் தொடர்புப் பிரிவைச் சேர்ந்த நவின்குமார் ஜின்டால் என்பவரும், தன்னுடைய டிவிட்டரில் இஸ்லாமிய வெறுப்புக் கருத்துக்களை பதிவிட்டிருந் தார். இந்தக் கருத்துகள் பகுத்தறிவு - அறிவியல் பார்வையில் பேசப்பட்டது அல்ல; இந்துத்துவாவின் இஸ்லாமிய வெறுப்புப் பார்வையில் பேசப்பட்டது.

இந்தக் கருத்துகள் உலகம் முழுவதும் கொந்தளிப்பை உண்டாக்கி, இஸ்லாமிய நாடுகள் இந்தியாவின் தூதர்களை அழைத்து, இந்தியா பொது மன்னிப்பு கோர வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. வளைகுடா நாடுகள், இந்தியாவினுடைய பொருட்களை புறக்கணிக்க வேண்டும் என்ற இயக்கத்தை தொடங்கி இருக்கின்றன. போகாவில் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்யா தற்போது சுற்றுப் பயணம் மேற்கொண்டு இருக்கிறார். அவர் சுற்றுப்பயணம் கொண்டிருக்கிற நேரத்திலேயே அந்நாட்டு தூதரகம் அழைத்து கடுமையான கண்டனத்தை தெரிவித்து, இந்தியாவிற்கான எதிர்ப்புக் குரல்கள் அங்கே உருவாகி இருக்கின்றன.

இந்த நிலையில் நடுங்கிப்போன ஒன்றிய ஆட்சி, பாஜக வின் அதிகாரப்பூர்வ பேச்சாளர் நுபுர் ஷர்மா, நவின் குமார் ஜின்டால் இருவரையும் கட்சியிலிருந்து நீக்கி வைத்திருப்பதோடு, அந்தக் கருத்துக்கும் பாஜகவிற்கும் தொடர்பு இல்லை என்றும், தாங்கள் எந்த மதத்தையும் வெருக்கக் கூடியவர்கள் அல்ல என்றும், இந்தியாவினுடைய அரசியல் சட்டம் அனைவரையும் சமமாக பாவிக்கிறது என்றும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அனைத்து மதத்தினரையும் மதிப்பதே இந்தியாவின் வரலாறு என்றும், தங்களுடைய குரலை தலைகீழாக மாற்றி இப்போது பேசி உலக நாடுகளை ஏமாற்றும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

இந்தியாவில் மத எதிர்ப்புக் கருத்துக்களை வைத்து அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி ஒரு இந்து இராஷ்டிரம் என்ற பார்ப்பன இராஜ்ஜியத்தை உருவாக்க இஸ்லாமிய எதிர்ப்பின் மூலம் அதை அடையலாம் என்று திட்டமிட்டவர்கள், இன்று உலக நாடுகளின் நெருக்கடியை சந்திக்கின்ற நிலைக்கு தள்ளப்பபட்டு இருப்பதை பாஜகவினர் சிந்தித்து, அவர்கள் அடித்த பந்தே அவர்கள் பக்கம் திருப்பி அடிப்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். மதவெறி என்றைக்கும், எவரையும் காப்பாற்ற முன் வராது.

## அ.இ.அ.தி.மு.க.வில் பா.ஜ.க. எதிர்ப்புக் கலகம்

ஓபிஎஸ் யும், இபிஎஸ் யும் அஇஅதிமுகவை தமிழ்நாடு பாஜகவிடம் விலை பேசி கொண்டிருக்கும் போது முதுகெலும்புடன் துணிச்சலாக குரல் கொடுத்துள்ளார் அக்கட்சியின், முன்னாள் அவைத் தலைவர் பொன்னையன். அதற்காக அவரைப் பாராட்ட வேண்டும். ‘அஇஅதிமுகவை பலியாக்கி தமிழ்நாட்டில் தன்னை வளர்த்துக்கொள்ள பார்க்கிறது பாஜக’ என்று கூறியவர் அதன் வளர்ச்சி தமிழ்நாட்டிற்கோ, அஇஅதிமுகவிற்கோ, திராவிடக் கொள்கைக்கோ நல்லது அல்ல. என்று கூறியுள்ளார். கட்சியின் தொழில்நுட்ப அணி பாஜகவை அம்பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

காவிரி முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டுக்கு எதிராக பாஜக இரட்டை வேடம் போடுவதையும், தமிழ்நாடு பாஜக கள்ள மவுனம் சாதிப்பதையும் அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார். ஏதோ மக்கள் பிரச்சனையில் கவலை உள்ளவர் போல தினமும் நாடகம் நடத்தி வருகிறார் அண்ணாமலை. ஆனால், அக்கட்சியின் உண்மையான முகம் என்பதோ வேறு. பார்ப்பனியத்தையும், மதவெறியையும் பாதுகாப்பது தான் பாஜக வின் உண்மையான முகம்.

காசியிலும், மதுராவிலும் உள்ள மசூதிகள், ஏற்கெனவே இருந்த விஸ்வநாதன், கிருஷ்ணன் கோயில்களை இடித்து கட்டப்பட்டவை என்று மற்றொரு அயோத்தியை உருவாக்குவதே அவர்களின் மற்றொரு அஜெண்டா.

அண்ணாமலை இதையெல்லாம் பேசாமல் முகமூடி அணிந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களின் காதில் பூ சுத்திக் கொண்டு, மக்கள் பிரச்சனைகளைப் பற்றி கவலைப் படுவதாக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார். கர்நாடகத்தில் நடக்கும் பாஜக ஆட்சியே அவர்களுடைய உண்மை முகத்தை அம்பலமாக்கிக் கொண்டிருக்கிறது. அம்மாநில பாடபுத்தகத்தில் பசவண்ணா பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது, “ஜாதிய அடக்குமுறையை எதிர்த்த பசவண்ணா, பூணூலை அறுத்து எறிந்தவர். ஜாதிகளே இல்லாத வீர சைவம் என்ற சித்தாந்தத்தை உருவாக்கி, வைதிக தர்மம், வைதிக சடங்குகளை புறக்கணித்தவர்” என்று இருந்த வரிகளை இப்போது நீக்கிவிட்டு, வீர சைவ மாதா சீர்திருத்தத்தை உருவாக்கியவர் என்று ஒற்றை வரியோடு பாடத்தை முடித்து விட்டார்கள்.

அதே போல அம்பேத்கர் பற்றி இடம் பெற்றிருந்த “ஜாதி அமைப்பை எதிர்த்த அம்பேத்கர் இந்து தர்மத்திற்கு முழுக்குப் போட்டு புத்த தர்மத்தை ஏற்றார்” என்ற வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக திரித்து,’தன்னுடைய தள்ளாத காலத்தில் இந்து தர்மத்தை கைவிட்டு பவுத்த தர்மத்தை ஏற்றார் அதுவும் இந்து தர்மத்தில் ஒன்று. ஆக, ஜாதி, வைதிக எதிர்ப்பு என்றாலே பாஜகவிற்கு கசக்கிறது. காரணம், அதைக் காப்பாற்றுவதற்குத் தான் அவர்கள் கட்சி நடத்துகிறார்கள். தமிழ் நாட்டு அண்ணாமலை ஏதோ மக்கள் பிரச்சனைகளில் கவனமெடுப்பது போல நாடகமாடிக்கொண்டிருப்பதை மக்கள் நிச்சயமாக புரிந்து கொள்வார்கள்.

# விரிவான தகவல்களுடன் முனைவர் ஜெயரஞ்சன் உரை

# கிராமப்புற விவசாயிகளை நிலப்பிரபுக்கள் பிடியிலிருந்து மீட்க – கலைஞர் நிறைவேற்றிய சாதனை சட்டங்கள்

*திராவிட மாடல் பயிற்சிப் பாசறை தொடக்க விழா 5.6.2022 அன்று கலைஞர் அரங்கில் நடந்தது. திட்டக் குழு துணைத் தலைவர் முனைவர் ஜெயரஞ்சன் பங்கேற்று ஆற்றிய உரை:*

1967இல் ஆட்சிக்கு வந்த பிறகு நமக்கு அரசியல் அதிகாரம் கிடைத்தது. சமூகநீதி இயக்கம் எதற்காகப் போராடியதோ, அதை எல்லாம் செயல் வடிவம் கொடுக்கக் கூடிய ஓர் அரிய வாய்ப்பு நமக்குக் கிடைத்தது.

ஆனால், அண்ணா முதலமைச்சராக இருந்தது ஒன்றரை ஆண்டுகள்தான். அவர் மறைந்த பிறகு, அந்த அரும்பணியும், அந்த அரிய வாய்ப்பும் டாக்டர் கலைஞரிடம் வந்து சேர்ந்தது.

1976 ஆம் ஆண்டுவரை அவர் செய்த காரியம் இருக்கிறதே, தமிழ்ச் சமுதாயத்தையும், தமிழ்ப் பொருளாதாரத்தையும், தமிழக அரசியல் செயல்படுகின்ற விதத்தை எந்த அளவிற்கு மாற்றியமைத்திருக்கின்றார் என்பதைப் பார்த்தால், வியப்பாக இருக்கும்.

தமிழகத்தில் மட்டும்தான் வளர்ச்சி என்பது ஜனநாயகப்படுத்தப்பட்டு உள்ளது. இதற்குப் பொருள் என்னவென்று சொன்னால்,

நிலம் என்பது ஒரு சிலரிடம் மட்டும்தான் குவிந்திருந்தது. அதற்காக நில உச்சவரம்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், அந்தச் சட்டம் தமிழ்நாட்டில் வெற்றி பெறவில்லை.

கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு, அவர் செய்த ஒரு அமைதிப் புரட்சி - நிலத்தை ஜனநாயகப்படுத்தியது. காங்கிரஸ் ஆட்சியில் உச்சவரம்பு சட்டத்தில் ஓட்டை போடும் பல முயற்சிகளும் நடந்தன.

அதைத் தடுக்க அறக்கட்டளைகளை அமைத்து, அதன் மூலமாக நிலங்களை பினாமியாக வைத்திருந்தார்கள்; உச்சவரம்பிலிருந்து அறக்கட்டளை வழியாக தப்பித்துக் கொண்டனர்.

இந்த சூழ்ச்சியை முறியடிக்க கலைஞர் ஒரு சட்டம் கொண்டு வந்தார்.

ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு, எந்தெந்த அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டனவோ, அந்த அறக்கட்டளையில் இருக்கும் நிலங்கள் எல்லாம் - மீண்டும் யார் நிலவுடைமையாளரோ அவரிடம் சென்றுவிடும். அதன் பிறகு, நில உச்சவரம்பு சட்டம் செயல்படுத்தப்பட்டு, அதன் வழியாக அந்த நிலங்கள் கைப்பற்றப்படும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்.


ஆனால், நம்முடைய அரசமைப்புச் சட்டம் எப்படி இருக்கிறது என்று சொன்னால், மாநிலங்களில் நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றி, அதை ஆளுநருக்கு அனுப்பினால், அது திரும்பி வராது. அப்படியே அந்தச் சட்டம் டில்லிக்குப் போனாலும், அங்கே இருந்து திரும்பி வராது. அதுபோன்றுதான் முடங்கிப் போனது அந்த சட்டம் - அந்த சட்டம் திரும்பியே வரவில்லை.

அந்த சட்டத்தில் ஒரு பிரிவு இடம் பெற்றிருந்தது - என்னவென்றால், அறக்கட்டளையில் உள்ள நிலங்களை நீங்களே வைத்துக் கொள்ளலாம்; ஆனால், அறக்கட்டளையின் மூலம் நீங்கள் நேரிடையாக விவசாயம் செய்ய முடியாது; குத்தகைதாரர் மூலம்தான் விவசாயம் செய்ய முடியும் என்று கூறியது காங்கிரஸ் ஆட்சியில் வந்த சட்டம்.

ஆகவே கலைஞர் என்ன செய்கிறார் என்றால், குத்தகைதாரர்களுடைய கரத்தை வலுப்படுத்தினால், நிலவுடைமையை ஜனநாயகப்படுத்தலாம் என்கிற முடிவிற்கு வருகிறார். அதன் வழியாக அவர், குத்தகைப் பாதுகாப்புச் சட்டத்தை மிகவும் வலுவுள்ளதாக மாற்றுகிறார்.

எப்படி வலுவுள்ளதாக மாற்றுகிறார் என்றால், குத்தகைதாரர் என்று பதிவது மிகவும் கடினம். டாக்குமெண்ட் சான்று வேண்டும் என்ற நிலையில் அதை எளிமைப்படுத்தினர்.

பக்கத்து நிலக்காரர் சொன்னால் போதும், இவர்தான் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார் என்று. ஒருமுறை பதிவு செய்யப்பட்டுவிட்டால், அதன் பிறகு அந்தக் குத்தகை உரிமை நிலைநாட்டப்படும். அவ்வளவு சுலபமாக அவர்களை வெளியேற்ற முடியாது.



அதன் வழியாக, பெரு நிலச் சுவாந்தாரர்களுடைய நிலவுடைமைப் பிடியை மிகவும் தளர்த்திவிட்டார் கலைஞர்.

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய நிலவுடைமையாளர்களுடைய அதிகாரத்தின் வீழ்ச்சிக்கு மிக முக்கிய காரணமாக இருந்தது.

இன்னொரு பக்கம் என்ன செய்தார் சொன்னால், நம்மாட்கள் நிறைய பேருக்கு குடியிருக்கும் இடம் கூட சொந்தம் இல்லாமல் இருந்தது. நிலச் சுவான்தார் வீட்டில்தான் குடியிருக்கவேண்டி இருந்தது.

உத்தரவுக்கு படியவில்லை என்றாலோ, அதிகாரத்திற்குக் கட்டுப்படவில்லை என்றாலோ அவர்களுடைய வீட்டின் ஓட்டைப் பிரிப்பது - கதவை உடைப்பது என்பது சர்வ சாதாரணமாக இருந்தது 1950- 1960ஆம் ஆண்டுகளில். அதைத் தடுக்க - ஒரு குறிப்பிட்ட தேதியில், எவர் எங்கு குடியிருக்கிறாரோ, அந்த குடியிருக்கும் மனை அவருக்கே சொந்தம் என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றினார்.

குடியிருப்பு நில உரிமைச் சட்டமும், குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் - இந்த இரண்டு சட்டங்களும்தான் நிலத்தை தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் ஜனநாயகப்படுத்தியது.

> காங்கிரஸ் ஆட்சி கொண்டு வந்த நில உச்சரம்பு சட்டங்களில் ஓட்டைகளைப் போட்ட நில உடைமையாளர்களிடமிருந்து கிராமப்புற விவசாயிகளை மீட்க கலைஞர் கொண்டு வந்த சட்டங்களையும், உணவு விநியோகத்தில் ஒன்றிய ஆட்சியின் அதிகாரத்தைத் தகர்க்க எடுத்த முயற்சிகளையும், கிராமப்புறங்களில் ரேஷன் கார்டுகளை விரிவுபடுத்தியதால் ஏற்பட்ட தாக்கத்தையும் முனைவர் ஜெயரஞ்சன் விளக்கினார்.

இதனால், கிராமப்புறத்தில் உள்ள விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பெரிய அளவில் பயன்பெற்றனர். அவர்களுடைய உரிமைகள் நிலைநாட்டப்பட்டன.

அடுத்ததாக, உணவு என்பதைப் பார்த்தீர்களேயானால், நன்றாக விளையக்கூடிய பகுதியில்கூட, எல்லோருக்கும் உணவு கிடைப்பது என்பது அவ்வளவு சுலபமல்ல.

ஏனென்றால், நம்முடைய சமுதாயம் எப்படி கட்டமைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், ஜாதி ரீதியாகக் கட்டமைக்கப்பட்டு இருக்கிறது. நிலவுடைமை ஜாதிக் கட்டமைப்பை இணைத்தே இருந்தது.

மேல்ஜாதியில் இருக்கின்றவர்களுக்கு நிலம் அதிகமாகவும், அடுத்தடுத்த ஜாதியில் உள்ளவர்களுக்கு நிலம் குறைவாகவும், கடைசியில் இருப்பவர்கள் நிலமற்ற ஏழைகளாக, கூலித் தொழிலாளர்களாக இருந்தார்கள் - 1950-1960 ஆம் ஆண்டுவரை.

அதுபோன்ற ஒரு காலகட்டத்தில், பிரிட்டிஷ் அரசாங்கமாக இருக்கட்டும்; விடுதலை கிடைத்த பிறகு வந்த அரசாங்கமாக இருக்கட்டும்; இதுபற்றி யாரும் சிந்தித்தது கிடையாது.

கிராமப்புறங்களில்தான் விவசாயம் நடைபெறுகிறது - அங்கெல்லாம் உணவு இருக்கும் என்று கற்பனை செய்துகொண்டிருந்தார்கள்.

ஆனால், கிராமப்புறத்தில் நெல் விளைந்தாலும் கூட, எல்லோருக்கும் அந்த உணவு தானியம் போய்ச் சேராது; சேராத அளவிற்கு மேல்தட்டினர் பார்த்துக் கொள்வார்கள்.

அந்த நிலையில், அவர்களுக்கு உணவு தானியத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியது அரசின் கடமை என்பதை நினைவில் நிறுத்தி,

1974 இல்தான் முதன்முதலில் தமிழ்நாட்டில் கிராமப்புறங்கள் - நகர்புறங்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமல், அனைவருக்கும் ரேஷன் அட்டைகள் வழங்கப்பட்டன. அதுவரை கிராமப்புறங்களில் ரேஷன் அட்டை கிடையவே கிடையாது.

அதுதான் முதல் விதை.

**உணவு வழக்கும் கழகம்**

அதற்குப் பிறகு, தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கும் கழகத்தைத் தொடங்குகிறார். இந்திய உணவுக் கழகம் என்னவெல்லாம் செய்கிறதோ அதையெல்லாம் இந்தக் கழகமும் செய்யும் என்றார்.

ஏனென்றால், டில்லியில் இருக்கின்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், புட் கார்ப்பரேசன் ஆஃப் இண்டியா என்ற ஒன்றைத் தொடங்கி வைத்துக் கொண்டு, நெல், கோதுமையை கொள்முதல் செய்து வைத்து, நமக்கும், அவர்களுக்கும் ஒத்துவரவில்லை என்றால், நமக்கு உணவுப் பொருள்களை வழங்க மாட்டார்கள்.

முன்பெல்லாம் ஒரு பெரிய வேலை என்னவென்றால், முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் செல்லும் பொழுதெல்லாம், உணவுத் துறை அமைச்சரை சந்தித்து, எங்களுக்குக் கூடுதலாக உணவுப் பொருள்களை வழங்கவேண்டும் என்று கேட்பார்கள்.

கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டு, முதன்முறையாக டில்லிக்குச் சென்று முதல் அமைச்சராக சந்தித்தவர் யார் என்றால், உணவுத் துறை அமைச்சராக இருந்த ஜெகஜீவன் ராம் அவர்களைத்தான் பார்த்தார்.

எங்களுக்குக் கூடுலாக உணவுப் பொருள் வேண்டும் என்று கேட்கிறார். அவர் 50 ஆயிரம் டன் உணவுப் பொருள்களை வழங்குகிறேன் என்று சொல்கிறார்.

அடுத்த நாள் பிரதமரை சந்தித்துவிட்டு, மீண்டும் உணவுத் துறை அமைச்சரை சந்தித்து, இன்னொரு 50 ஆயிரம் டன் உணவுப் பொருள்கள் வேண்டும் என்று கேட்கிறார். இது வழக்கமான நடைமுறையாக இருந்தது.

இதுபோன்ற ஒரு நிலைமையை மாற்றவேண்டும் என்றால், அதற்கு இணையான அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்று - இங்கே உணவுக் கழகம் தொடங்கப்பட்டது.

பிற்காலத்தில் நம்முடைய மாநிலத்தில் உணவு உற்பத்தி அதிகமாகும்பொழுதும், அரசினுடைய நிதி அதிகமாகும் பொழுதும் - அடுத்த உறுதியை அளித்தார்.

ரேஷன் அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் 2 ரூபாய்க்கு அரிசி என்றார். கிராமப்புறங்களில் உள்ளவர்கள் யாரிடமும் உணவுப் பொருள்களுக்காகக் கையேந்தி நிற்கவேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

இது ஒரு மிகப் பெரிய சாதனையாகும்.

சிறு வயதில் நான் பார்த்திருக்கிறேன் - கோடைக் காலம் வந்தால், நிறைய பேர் வட்டிக்கு நெல் வாங்கும் நிலை இருந்தது. நிறைய மக்கள் சுயமரியாதையை இழந்து நின்றார்கள். அந்த சுயமரியாதையை மீட்டுக் கொடுத்தவர் கலைஞர்.

இந்தப் பார்வை யாருக்கு வரும் என்றால், யாருக்கு சமூகநீதி உணர்வு இருக்கிறதோ, யாருக்கு சுயமரியாதை உணர்வு இருக்கிறதோ அவர்களுக்குத்தான் வரும்.

பொது விநியோகத் திட்டத்தில் கை வைத்தார்கள் என்றால், அவர்களுக்குக் கிடைத்தது மிகப்பெரிய சம்மட்டி அடி தான். அவர்களுக்குத் தேர்தலில் மிகப்பெரிய தோல்வியை சந்தித்ததுதான் வரலாறு.

இந்தியாவில் பல மாநிலங்களில் இலக்கு சார்ந்த பொது விநியோகம் என்று திட்டம் மாற்றியமைக்கப்பட்ட போதும், தமிழ்நாட்டில் இன்றுவரை அதை மாற்றி அமைக்கப்பட முடியாமல், அது அனைவருக்குமான பொது விநியோகத் திட்டமாக - இலவச அரிசியாக சென்று கொண்டிருக்கிறது.

அதன் வழியாக இந்தியாவிலேயே தமிழக மக்கள் மட்டும்தான் உணவிற்காக யாரிடமும் போய் கையேந்துவதோ அல்லது பட்டினியாக படுப்பதோ இல்லை.

நாம் ஒன்றும் பெரிய பணக்கார நாடு கிடையாது. ஆனால், இவ்வளவு பெரிய மாற்றத்தை உருவாக்கக் கூடிய வல்லமை கலைஞருக்கு மட்டும்தான் இருந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 09.06.2022**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மடத்துக்குளம் மோகன் நினைவேந்தல்: திராவிட மாடல் விளக்கக் கூட்டம்




கழக செயல்வீரர், தலைமைக் குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மற்றும் நமக்கான அடையாளம் திராவிட மாடல் விளக்கப் பொதுக்கூட்டம், மடத்துக்குளம் ஒன்றியம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 01.06.2022, புதன் கிழமை மாலை 6 மணியளவில் கணியூர் பெரியார் திடலில் நடைபெற்றது.

முன்னதாக காலை 10 மணியளவில் மடத்துக்குளம் நால்ரோடு பகுதியில் கழகக் கொடி ஏற்றப்பட்டது. முனைவர் பேராசிரியர் சுந்தரவள்ளி (தமுஎகச) கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மடத்துக்குளம் மோகன் இணையர் ஜோதிமணி மகள் அறிவுமதி மற்றும் கழக நிர்வாகிகள் தோழர்கள் கணக்கன், சிவானந்தம், ஐயப்பன், சரவணன், வெள்ளிங்கிரி, ஆனந்த், நீலாம்பூர் கருப்புசாமி, பாண்டியநாதன், திராவிட தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் தங்கவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலை 6 மணி அளவில் கணியூர் பெரியார் திடலில் நமக்கான அடையாளம் திராவிட மாடல் விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. யாழினி - ஆனைமலை வினோதினி ஆகியோர் கொள்கைப் பாடல்களை பாடினார்கள்.

ஒன்றியத் தலைவர் த.கணக்கன் தலைமை தாங்கினார். சங்கீதா சிவானந்தம் வரவேற்புரையாற்றினார்.

உடுமலை நகர அமைப்பாளர் இயல் - மடத்துக்குளம் ஒன்றிய துணைத் தலைவர் வெ.ஐயப்பன் - கழகத் தோழர்கள் வெ.சரவணன், தெ.சக்திவேல், துரை. ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழகப் பொருளாளர் துரைசாமி - தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் - உடுமலை முற்போக்காளர் கூட்டமைப்பின் தலைவர் வழக்கறிஞர் சாதிக்பாட்சா - விடுதலை சிறுத்தைகள் கட்சி பழ. ராஜசேகர் - திராவிடர் கழக மாநில அமைப்புச் செயலாளர் சாமிநாதன் - தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி - கோவை மாவட்டக் கழகச் செயலாளர் வெள்ளிங்கிரி - திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் முகில் ராசு - கோவை மாநகர செயலாளர் நிர்மல் மற்றும் பாண்டிய நாதன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மடத்துக்குளம் மோகன் படத்தைத் திறந்து வைத்தார். அப்பொழுது கோவை மாவட்டச் செயலாளர் பொள்ளாச்சி வெள்ளிங்கிரி புகழ் வணக்கம் செலுத்தி முழக்கங்களை எழுப்பினார். நீலாம்பூர் கருப்புச்சாமி நன்றியுரையாற்றினார்.

இப்பொதுக்கூட்டத்தில் மடத்துக்குளம், உடுமலை, பொள்ளாச்சி, கோவை, திருப்பூர் பகுதிகளில் இருந்து கழகத் தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

மறைந்த தோழர் மடத்துக்குளம் மோகன் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வின் நினைவாக அவரது குடும்பத்தின் சார்பில் இணையர் ஜோதிமணி மகள் அறிவுமதி ஆகியோர் ‘புரட்சிப்பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.5000/- (ரூபாய் அய்ந்தாயிரம்) கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினர்.

மடத்துக்குளம் ஒன்றியம் திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் இந்நிகழ்வுகள் சிறப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# சடங்குகள் இன்றி கோவை கழகத் தோழர் இல்லத் திறப்பு



கோவையில் கடந்த ஜூன் 5ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் ‘டிட்டோ போட்டோஸ்’ புகைப்பட நிறுவனம் நடத்தும் சிவராஜ் கண்ணுமா இல்லத்தை புலவர் செந்தலை கவுதமன் திறந்து வைத்தார்.

இல்லத் திறப்பு நிகழ்ச்சியில் பார்ப்பனர்களின் வைதீக சடங்கு சம்பிரதாயங்கள் தவிர்க்கப்பட்டது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பலராலும் பேசுப் பொருளாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் ராமச்சந்திரன், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, கோவை மாவட்டச் செயலாளர் வெள்ளிங்கிரி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி மற்றும் திருப்பூர் கோவை மாவட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பெரியார் படம் நினைவு பரிசாக வழங்கப்பட்டது.

## கோவை அண்ணா சிலை முன்பு கலைஞர் பிறந்த நாள் நிகழ்வு



3.6.2022 அன்று காந்திபுரம் அண்ணா சிலை முன்பு திராவிட இயக்கத் தலைவர் கலைஞர் கருணாநிதி பிறந்த நாள் விழாவை லோகு தலைமையில் கொள்கை முழக்கங்கள் எழுப்பிக் கொண்டாடப்பட்டது. கோவை மாநகரத் தோழர்கள் கலந்து கொண்டனர். கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகம் இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

என று உத்தரவிட்டது. சிவில் நீதிமன்றத்தின் உத்தரவை உயர்நீதிமன்றம் பின்னர் நிறுத்தி வைத்தது. ’இந்த வழக்கில் பாரம்பரிய முறையில் இருந்து விலகி கீழ் நீதிமன்றம் தானாகவே இந்த வழக்கை விசாரிக்க முன்வந்தது வருத்தத்திற்குரியது’ என்று உயர்நீதிமன்ற நீதிபதி பிரகாஷ் படியா தனது உத்தரவில் குறிப்பிட்டார். (செப்டம்பர் 9, 2021)

ஆகஸ்டு 2021 ல் அய்ந்து பெண்கள் இணைந்து வாரணாசி விசாரணை நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்தனர். கியான்வாபி பள்ளிவாசலில் ஷிரிங்கார் கௌரி (பார்வதி), விநாயகர், ஹனுமன் மற்றும் கண்ணுக்குத் தெரிந்த, தெரியாத சிலைகள் இருப்பதால் அங்கு வழிபாடு செய்ய தங்களுக்கு அனுமதியளிக்க வெண்டும் என்று அதில் குறிப்பிட்டிருந்தனர். இந்த அய்ந்து பெண்களும் இந்துத்துவ குடும்பங்களை சார்ந்தவர்கள்.

வழக்கறிஞர் அஜய் குமார் சர்மா என்பவரை ஆலோசகராக நியமித்த நீதிமன்றம் கோயில் வளாகத்தில் வீடியோ ஆய்வு செய்ய உத்தரவிட்டது. ஆனால் எல்லை மீறிச் சென்றவர்கள் பள்ளிவாசல் பகுதிக்கும் ஆய்வுக்கும் சென்றதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

வழக்கறிஞர் அஜய் குமார் சர்மா ஒரு தலைபட்சமாக செயல்படுவதாகவும் முஸ்லிம்கள் தரப்பில் வழக்கு நடத்தி வரும் அன்ஜூமன் இஸ்லாமிய மஸ்ஜித் கமிட்டி குற்றம்சாட்டி அவரை மாற்ற வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தது.

ஆனால், முஸ்லிம்களின் கோரிக்கையை நிராகரித்த நீதிபதி ரவி குமார் திவாகர், கூடுதல் ஆலோசகர்களாக விஷ்ணுகுமார் சிங் மற்றும் அஜய் சிங் இருவரையும் நியமித்து உத்தரவிட்டார். அத்துடன் இந்த வழக்கை விசாரித்து வருவதால் தனது உயிர் குறித்து தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் உயிர் குறித்தான அச்சம் இருப்பதாக நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டிருந்தார். வழக்கில் இப்படி தேவையற்ற கருத்துக்களை தெரிவித்ததும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

மறுதினம் ஆய்விற்கு சென்ற குழு பள்ளிவாசல் பகுதிகளை வீடியோ ஆய்வு மேற்கொண்டது. அப்போது உளூ செய்யும் இடத்தில் உள்ள ஒரு நீரூற்றை, சிவலிங்கம் என்று கூறி வேகமாக அடுத்தடுத்த நகர்வுகளை மேற்கொண்டனர். ஆய்வு கமிட்டியில் இந்து தரப்பில் சென்ற சோகன்லால் ஆர்யா என்பவர்தான் சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறி, தெளிவான ஆதாரங்கள் தங்களுக்குக் கிடைத்துள்ளதாகவும் வெளியில் தெரிவித்தார். நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்னர், அது நிரூபிக்கப்படுவதற்கு முன்னர் பொதுவெளியில் கருத்து தெரிவித்த இவர் மீது நீதிமன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆய்வின் முடிவுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே நீதிமன்றத்தின் உத்தரவு. மேலும் இந்த ஆய்வு அறிவியல் பூர்வமாகவோ அறிவுப்பூர்வமாகவோ மேற்கொள்ளப்பட்ட ஆய்வல்ல. பள்ளிவாசல் மற்றும் கோயில் பகுதிகளை வீடியோ பதிவு செய்துவர வேண்டும் என்பதுதான் நீதிமன்ற உத்தரவு.

அறிக்கையை பெற்றுக் கொண்ட நீதிமன்றமும் அதனை எவ்வித ஆய்விற்கும் உட்படுத்தாமல், ‘உளூ’ செய்யும் பகுதியை உடனடியாக சீல் வைக்க வேண்டும். இருபது பேர் மட்டுமே தொழுகைக்கு வர வேண்டும் என்று அநீதியான தீர்ப்பை வழங்கியது. முஸ்லிம்கள் தங்கள் தரப்பு வாதத்தை முன்வைப்பதற்கு எந்த அனுமதியும் வழங்காமல் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனிடையே பள்ளிவாசலில் சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தொடர்ந்து அங்கும் தங்களுக்கு வழிபாடு செய்ய அனுமதியளிக்க வேண்டும் என்றும் அய்ந்து பெண்களும் மற்றொரு வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th June 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN